# கூட்டுறவு

மார்ச் – 2025




ரூ.20/-

C.C. BANK

நம்பகமான பாதுகாப்பு
நிலையான வளர்ச்சி

(Since 1930)

# சென்னை மத்திய கூட்டுறவு வங்கி

215, பிரகாசம் சாலை, (பிராட்வே), சென்னை-600108.

தொலைபேசி எண் : 044-23458708 to 23458713 பேக்ஸ் :044-25381087

Web : www.ccbankchennai.com Email : ccb_bank@yahoo.co.in

சென்னை மாநகரில் 71 கிளைகள்




- மைய வங்கியியல் சேவையுடன் கூடிய கிளைகள்
- ATM மற்றும் SMS வசதி
- RTGS / NEFT பணப் பரிமாற்ற வசதி
- 54 கிளைகள் குளிர்சாதனம் மற்றும் நவீன வசதிகளுடன்
- சுமார் 10,000 வாடிக்கையாளர்களுக்கு நேரடி சமையல் எரிவாயு மானியம்
- ரூ.500 கோடிக்கும் அதிகமான முதலீடு
- வைப்பீடுகளுக்கு கூடுதல் வட்டி
- ஆயுள்/ பொதுக் காப்பீடு சேவைகள்

**அனைத்துத் தரப்பினருக்குமான கடனுதவிகள்**

- வீடு அடமானக் கடன்கள் / வீட்டுவசதி கடன்கள்
- நகைக் கடன்கள் (பல்வேறு வட்டி விகிதங்களில்)
- மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன்கள்
- சிறுவணிகக் கடன்
- சம்பளக் கடன்
- சுய உதவிக் குழுக்களுக்கான கடன்

(IFS Code: TNSC0010500)

# கூட்டுறவு

மலர் : 97 | மார்ச் : 2025 | இதழ் : 12


கூட்டுறவு இயக்க கொள்கை விளக்க இதழ்
எல்லார்க்கும் எல்லாமே என்றே ஞாலம்
இலங்கிடவே கூட்டுறவு ஏற்ற பாதை
இல்லாமை இல்லாத வாழ்வு வேண்டின்
ஏற்றிடுவோம் கூட்டுறவு வெற்றிப் பாதை!


ஆசிரியர் :

முனைவர். க.சொ. இரவிச்சந்திரன்,
M.Sc.,(Agri), M.A.,B.L., H.D.C.M., Ph.D.,,

தொலைபேசி : 044–2836 4864

மின்னஞ்சல் : tncupub03@gmail.com

இணையதளம் : www.tncu.tn.gov.in



ஆயுள் சந்தா ரூ. 2000/–
(பத்தாண்டுகளுக்கு)
ஆண்டு சந்தா ரூ.210/–
தனிப்பிரதி விலை ரூ.20/–



## விளம்பரக் கட்டணம்

பல வண்ணம் (ஓராண்டிற்கு)
அட்டை 4 ஆம் பக்கம் ரூ.50,000/–
அட்டை 2 & 3 ஆம் பக்கம் ரூ.40,000/–

உள்ளே கருப்பு – வெள்ளை
(ஓராண்டிற்கு)
முழுப்பக்கம் ரூ.24,000/–
அரைப்பக்கம் ரூ.12,000/–

உள்ளே கருப்பு – வெள்ளை
(6 மாதங்களுக்கு)
முழுப்பக்கம் ரூ.12,000/–
அரைப்பக்கம் ரூ. 6,000/–


## இந்த இதழில்....


ஆசிரியர் உரை:- காந்திய வழியில் கூட்டுறவு — 5

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் "முதல்வர் மருந்தகம்" என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் திறந்து வைத்தார். — 11

முதல்வர் மருந்தகங்களின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. — 16

நம்ம ஊர்...நம்ம கூட்டுறவு... திருச்சி- ஸ்ரீ ரெங்கநாதா கூட்டுறவு பண்டகசாலை — 21

ஆரோக்கியத்திற்கு ஒரு சூப்பர்ஃபுட்! - "கேழ்வரகு" — 26

கூட்டுறவில் மகளிர் - சமூக மாற்றத்தின் சக்தி — 32



'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்;
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டீரோ!'


-மகாகவி சுப்பிரமணி பாரதியார்




தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் 24.02.2025 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கில், கூட்டுறவுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் "முதல்வர் மருந்தகம்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. க. நந்தகுமார். இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திரு. எஸ்.பி. அம்ரித், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் உரை



# காந்திய வழியில் கூட்டுறவு

மனிதரில் புண்ணிய ஆத்மாக்களாக விளங்க கூடியவர்கள், மிகச் சிலரே அந்த புண்ணிய ஆத்மாவிற்கு விளக்கம் அளிக்கின்ற வகையில் காந்தியின் வாழ்க்கையும், சிந்தனையும் அமைந்துள்ளன.

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியாக இருந்தவர் ஹரிசந்திரா நாடகம் பார்த்த தருணத்திலேயே மகாத்மா காந்தியாக மாறிவிட்டார்.

**" ஞானம் சிலர் பிறப்பிலும் தெரியும்,**
**சிலர் இறப்பிலும் தெரியும்" – கவியரசு கண்ணதாசன்**

அதைபோல, அந்த ஞானம் அவருடைய பிறப்பிலே இருந்திருக்கிறது.காந்தியினுடைய சிந்தனை எவ்வாறு புத்தர் வெளி உலகங்களை பார்த்து மனிதர்களுடைய துன்பத்தை அறிந்து ஞானம் பெற்று போதனை வழங்கினாரே, அதைப் போல காந்தி பலதரப்பட்ட மக்கள், பல நாடுகளில் மக்களின் அடிமை வாழ்வை அறிந்து தன்னுடைய சிந்தனையையும், கொள்கையும் வெளிப்படுத்தினார். அதற்கு அடித்தளமாக லியோ டால்ஸ்டாய் (Leo–Tolstoy) னுடைய புத்தகம் "உனக்குள்ளே கடவுள் ராஜ்ஜியம்" ('The Kingdom of God with–in you' ) மற்றும் ஜான் ரஸ்கினுடைய (John Ruskin), "கடையனுக்கும் கடைத்தேற்றல்" "(Unto the Last)" இவர்களுடைய போதனையே காந்தியை மக்கள்பால் கருணை செய்ய தூண்டியது. இதுவே காந்தியடிகளுக்கு அகிம்சை மற்றும் சத்தியத்தை போதித்தது. அதனடிப்படையிலேயே, காந்தி தன்னுடைய சுதந்திர போரட்டத்தையும், நாட்டின் வளர்ச்சிக்கான சிந்தனைகளையும் கொண்டார்.

இதற்கு முன்னரே, இந்த சிந்தனைகளை தமிழகத்தில் திருவள்ளுவர், மாணிக்கவாசகர் மற்றும் வள்ளலார் ஆகியோர் ஏற்படுத்தினார்கள்.

**திருவள்ளுவர்,**

**மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்**
**தகுதியான் வென்று விடல்.**

**மாணிக்கவாசகர்,**

**நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி**
**நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி**
**நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்**
**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே.**

**திருமூலர்,**

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**

**வள்ளல் பெருமான்,**

**துண்ணெனக் கொடியோர் பிற உயிர் கொல்லத்**
**தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்**
**கண்ணினால் ஐயோ பிற உயிர் பதைக்கக்**
**கண்ட காலத்திலும் பதைத்தேன்**
**மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி**
**வகைகளும் கண்ட போதெல்லாம்**
**எண்ணி என் உள்ளம் நடுங்கிய நடுக்கம்**
**என் தந்தை நின் திரு உளம் அறியும்.**

மேற்கண்ட சிந்தனைகள் எல்லாம் இந்த மண்ணில் விதைக்கப்பட்டவை, தென் ஆப்ரிக்காவில் காந்திக்கு தமிழர்கள் மூலம் மேற்கண்ட கோட்பாடுகள் எடுத்துரைக்கப்பட்டது.

## தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை அதிகம்

ஆன்ம ஒளியும், பிறர்பால் உள்ள இரக்கமும், கருணையும் கொண்ட மனிதர்களாக தமிழர்கள் இருப்பதற்கு காரணமே நம்முடைய முன்னோர்கள் வழிகாட்டி சென்றதும், நமது இலக்கிய படைப்புகள் சுட்டிக்காட்டுவதன் மூலம் தொன்றுதொட்டு இப்பண்புகள் இன்றளவும் தொடர்கின்றது.

**திருக்குறளில்,**

**ஒத்த தறவோன் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்.**

**"பசித்தோர் முகம் பார்" – பட்டினத்தார்.**

**"ஆருயிர்க்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" – வள்ளலார்.**

மேற்கண்ட சிந்தனையின் அடிப்படையில் நம்முன்னோர்கள்

கூட்டுறவு சங்கங்களை அதிகமாக அமைத்தார்கள். கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலங்களையும் பொருட்களையும் தானமாக வழங்கினார்கள். ஏனென்றால், முகம் தெரியாத மனிதர்களுக்கு உதவுவதற்கு ஏற்பட்டுள்ள அமைப்புதான் கூட்டுறவுச் சங்கங்கள் என்று நம்முன்னோர்கள் கூட்டுறவு சங்கங்களை நிறுவினார்கள்.

இந்தியாவில் தோராயமாக ஒரு லட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளது. அவற்றில், தமிழகத்தில் தோராயமாக 25000 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. அதற்கு காரணம் மேற்கண்ட சிந்தனையே ஆகும். அதனால்தான் காந்தியடிகள் இந்தியாவில் ஓரினம் ஏற்பட வேண்டுமானால் சென்னை மகாணத்திற்கு அப்புறம் உள்ளவர்கள் தமிழுணரல் வேண்டும் என்றார். மேலும், "தமிழ் மக்கள் எனது இரத்த கலப்புற்று உடன் பிறந்தவர்கள் போல தோன்றுகின்றார்கள்" என தெரிவித்தார்.

இதன் அடிப்படையில், காந்தி தமது சிந்தனைகளை மக்களுடைய சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு இச்சிந்தனைகளை பயன்படுத்தினார். சாதாரண மனிதர்களுடைய சமூக நீதிக்கும் சமத்துவத்திற்கும் மேற்கண்ட சிந்தனைகளை காந்தி பயன்பட வைத்தார். மகாத்மா காந்தி, இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் வழிகாட்டி மட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிக்கும் பொருளாதார சிந்தனையாளர் என்பதிலும் குறிப்பிடத்தக்கவர். கிராம சமூகங்களை அதிகாரமளிக்கவும், சுயாதார்த்த வளர்ச்சியை மேம்படுத்தவும், கூட்டுறவுச் சங்கங்களை அவர் ஒரு முக்கிய கருவியாகக் கருதினார். அவரது பொருளாதாரக் கொள்கைகள் சுயபோதையையும், மையமற்ற நிர்வாகத்தையும், கிராமத் தொழில்களின் ஊக்குவிப்பையும் அடிப்படையாகக் கொண்டன.

## காந்தியின் பொருளாதாரக் கொள்கைகளும் கூட்டுறவுச் சங்கங்களும்

காந்தியின் 'சர்வோதயா' (அனைவரின் நலன்) என்ற தத்துவம், பொருளாதார கோட்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்தது. விவசாயிகள், நெசவாளர்கள், மற்றும் கைவினைப்பொருள் உற்பத்தியாளர்கள் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றம் அடைய, கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியமான ஒரு பாதையாக காட்சியளித்தன. பரஸ்பர ஒத்துழைப்பு, சமத்துவ அடிப்படையிலான உற்பத்தி மற்றும் நேரடி வர்த்தகம் ஆகியவற்றின் மூலம் கிராமப்புறங்களில்சுயமிகு பொருளாதார அமைப்பைஉருவாக்குவதில் அவர் முக்கிய கவனம் செலுத்தினார்.

## கூட்டுறவுச் சங்க இயக்கத்தில் காந்தியின் பங்கு

- **காதி மற்றும் கிராமத் தொழில்கள் முன்னேற்றம்:** காந்தி, காதி இயக்கத்தை கூட்டுறவுச் சங்க அடிப்படையில் அமைத்தார். இத்தொழிலில் ஈடுபட்ட நெசவாளர்கள், நூல் முறிப்பவர்கள், மற்றும் வணிகர்கள் அனைவரும் சமத்துவ அடிப்படையில் பயனடையும் வகையில் அமைப்பு செய்யப்பட்டிருந்தது.
- **விவசாய கூட்டுறவாளர்கள்:** விவசாயிகள் குழுவாக ஒன்றுசேர்ந்து நிலம், கால்நடை, பாசன வசதிகளை ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவதற்கான கூட்டுறவுச் சங்கங்கள், நிலத்தார்களின் மற்றும் நடுவர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட உதவுகின்றன என்பதில் காந்தி நம்பிக்கை வைத்தார்.
- **கூட்டுறவுச் கடன் சங்கங்கள்:** விவசாயிகளின் கடன் சுமையை குறைக்கும் நோக்கில், குறைந்த வட்டியில் கடன் வழங்கக்கூடிய கூட்டுறவுச் கடன் சங்கங்களை நிறுவ வேண்டிய அவசியத்தை காந்தி வலியுறுத்தினார்.
- **இந்திய கூட்டுறவுச் சங்க இயக்கத்தில் முக்கிய பங்கு:** 1934ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அகில இந்திய கிராமத் தொழில்கள் சங்கம் (AIVIA) உள்ளிட்ட அமைப்புகள், காந்தியின் கூட்டுறவுச் சங்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த முனைந்தன.

## சுயநிறைவு (சுதேசி) மற்றும் சர்வோதயம்:

**சுயநிறைவு (சுதேசி):**

சுயநிறைவு என்பது ஒரு நாடு தனக்குத் தேவையான பொருட்களைத் தானே உற்பத்தி செய்து கொள்வதைக் குறிக்கிறது. இது இறக்குமதியை குறைத்து உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கிறது.

**சர்வோதயம்:**

சர்வோதயம் என்பது "அனைவரின் நலன்" என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. இது ஒரு சமூக அரசியல் மற்றும் பொருளாதார தத்துவம் ஆகும்.

**சுயநிறைவு மற்றும் சர்வோதயம்** ஆகிய இரண்டும் இந்திய சமூக பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த இரண்டு கருத்துக்களையும் பின்பற்றுவதன் மூலம் இந்தியா ஒரு வலிமையான மற்றும் வளமான நாடாக மாற முடியும் என்றார் காந்தியடிகள்.

## காந்தியின் தியாகம் – கூட்டுறவில் பிரதிபலிப்பு

காந்தி ஒரு தியாகி, தியாகம் என்பது ஆத்ம சக்தியை ஒளிரச் செய்து தனக்குள்ள எல்லாவற்றையும் உவகையோடு பிறருக்கு அளிப்பது. காந்தி செல்வம் மிகுந்த குடும்பத்தில் பிறந்தாலும் அவர் எளிமையாக வாழ்ந்தார்.

வள்ளலார் பெற்ற ஆன்ம ஒளியே, காந்தியிடத்தில் ஆத்ம சக்தியாக தோன்றியது. அதனால் பொய்களை புறந்தள்ளி உள்ளொளியின் நுட்பத்தை அறிந்து எவ்வுயிருக்கும் மனதாலும் தீங்கு செய்யாமல் தன்னுயிர் மற்றும் உடலை தத்தம் செய்ய வேண்டும் என்ற நிலைபாடு காந்தியை தியாகி ஆக்கியது.

**வள்ளலார் தெரிவித்தது போல,**

**"அடுத்தவர் மயங்கி மதித்திட நினைத்தேன்**
**அடிக்கடி பொய்களே புனைந்தே**
**எடுத்தெடுத் துரைத்தேன்**

என்ற நிலையை நீக்கி காந்தியடிகள் மக்கள் படுகின்ற துன்பத்தை கண்டு மேலாடை அணிவதை தவிர்த்து தியாக உள்ளத்தை வெளிப்படுத்தினார். அந்த தியாக எண்ணம்தான் கூட்டுறவிற்கு அடிதளமாக இருக்கிறது.

## காந்தியின் கூட்டுறவுச் சங்க கொள்கைகளின் தாக்கம்

காந்தியின் கூட்டுறவுச் சங்கக் கொள்கைகள், இந்தியாவின் கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்கு வலு சேர்த்தன. இன்றளவும் பால்வளம் (அமுல் போன்றவை), வங்கி மற்றும் கைத்தறி துறைகளில் காணப்படும் கூட்டுறவுச் சங்கங்கள், அவரது சுயாதார்த்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

காந்தியின் கூட்டுறவுச் சங்கக் கொள்கைகள் பொருளாதார ஜனநாயகத்தை வளர்க்கும் முக்கிய வழியாக விளங்குகின்றன. உள்ளூர் பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமூக நலத்திற்கும் உதவும் இத்தகைய இயக்கம், இன்றளவும் இந்தியாவின் கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக்கான வழிகாட்டியாக இருந்து வருகிறது.

காந்தி, கூட்டுறவு அமைப்பை நாடு முழுவதும் ஏற்படுத்தினார். காந்தியினுடைய மதம் என்பது சேவையின் மூலமே ஆண்டவனை அடைய முடியும் என்பதை அறிந்து சேவையை தனது மதமாக கொண்டுள்ளார். கூட்டுறவு சங்கங்கள் சேவையை அடிப்படையாக

கொண்டு அமைக்கப்பட்ட நிறுவனங்கள் ஆகும். ஆகவே, காந்தியின் கொள்கைகள் சிந்தனையின் அடிப்படையில் கூட்டுறவு சங்கங்கள் அமைந்துள்ளன.

வள்ளலாரின் உயிர் இரக்க சிந்தனையாகிய **"உயிர்களை நேசிக்கக்கூடிய கலை கூடமாக மனிதனின் நிலைப்பாடு இருக்க வேண்டும்"** என்ற அடிப்படை கூட்டுறவின் அடிநாதமாக இருக்கிறது. இதுவே காந்தியின் சிந்தனையாகவும் உள்ளது.

இந்த சித்தாந்தமே கூட்டுறவு சங்கங்களில் காணப்படுகிறது. இக்காந்திய வழியில்தான் கூட்டுறவு சங்கங்கள் இந்தியாவில் பீடு நடைபோட்டு கொண்டு இருக்கிறது என்றால் மிகையாகாது❑

---

**நான் இன்று வாழ்வதற்கு**
**என் தந்தைக்கு கடமைப்பட்டிருக்கிறேன்,**
**ஆனால் நன்றாக வாழ்வதற்கு**
**என் ஆசிரியருக்கே கடமைப்பட்டுள்ளேன்.**
**– மாவீரன் அலெக்ஸ்சாண்டர்.**




கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## ஜி 1686 சிங்கபெருமாள்கோயில் நகர கூட்டுறவு கடன் சங்கம்

- மக்கள் சேவையில் 68 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 1 கிளையுடன் செயல்படும் சங்கம்.
- சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.66.00 கோடி சங்கம் சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.
- நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படகிறது.

**குறைந்த வட்டி நிறைவான சேவை**

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- முழு கணினி வசதி
- மொத்த வைப்புக்கள் ரூ.95.64 கோடி
- மொத்த கடன்கள் ரூ.89.95 கோடி

**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

அரசு திட்டக்கடன்கள் சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாரா கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்கடன்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கடன் மற்றும் சிறு வணிகக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.க.செண்பகவள்ளி, B.Com,M.B.A. D.Coop.,
செயலாளர்

திரு.சுரீன் விஜய், H.D.C.M.,
கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர்

# ஆர்.கே.10. விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்., விருதுநகர்

# 104/1, மதுரை ரோடு, அஞ்சல் பெட்டி எண் : 8, விருதுநகர்

தொலைபேசி எண்: (04562) 245815

Website : www.vrdccbank.in Email : virudhunagardccb@gmail.com

| வ. எண் | இட்டுவைப்பு காலம் | மூத்த குடிமக்கள் அல்லாத வாடிக்கையாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டி விகிதம் | மூத்த குடிமக்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டிவிகிதம் |
|---|---|---|---|
| 1. | 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 2. | 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 3. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 4. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.60% | 5.60% |
| 5. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 6.50% |
| 6. | ஒரு வருடம் முதல் 3 வருடங்கள் வரை | 7.50% | 8.00% |
| 7. | 3 வருடத்திற்கு மேல் | 7.30% | 7.80% |

- வைப்புகளுக்கு கூடுதல் வட்டி
- NEFT & RTGS வசதி
- ATM மற்றும் POS வசதி
- Mobile Banking வசதி
- INSTA CARD வசதி
- Micro ATM வசதி
- MSME கடன்
- சம்பளக்கடன்
- Bank of Wheels வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- தனி நபர் நகைக்காசுக் கடன்
- வீட்டு வசதி மற்றும் வீடு அடமானக்கடன்
- சிறு வணிகக்கடன்
- மாற்றுத்திறனாளிகள் கடன்
- முதலீட்டுக் கடன்கள்
- சுய உதவிக் குழுக்கடன்கள்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- UPI, IMPS, Phonepay, Gpay, Paytm. Whatsapp pay வசதி

**ப்பி.இராஜலட்சுமி**
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்



**த**மிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் 24.02.2025 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கில், கூட்டுறவுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் **"முதல்வர் மருந்தகம்"** என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார். காணொலி மூலம் தமிழ்நாடு முழுவதும் 1000 மருந்தகங்களை திறந்து வைத்து உரையாற்றிய போது, கல்வியும் மருத்துவமும்தான் திராவிட மாடல் ஆட்சியின் இரு கண்கள் எனக் குறிப்பிட்டார்.

**தமிழ்நாட்டில் முதல்வர் மருந்தகம் பொதுமக்களுக்கு தரமான மருத்துவ சேவை**

## முதல்வர் மருந்தக திட்டம் – மக்களின் சுமையை குறைக்கும் அரசு முயற்சி

மருத்துவச் செலவு அதிகரித்து, பொதுமக்கள் சிரமத்திற்குள்ளாகும் சூழ்நிலையில், தமிழக அரசு மருந்துகளை குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் முதல்வர் மருந்தக திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இது நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு தொடர்ந்து மருந்து எடுத்துக்கொள்ளும் மக்களுக்கு மிகப் பயனளிக்கவுள்ளது.

## முதல்வர் மருந்தகத்தின் முக்கிய அம்சங்கள்

- மருந்துகளுக்கு 25% தள்ளுபடி – பொதுமக்கள் தனியார் மருந்தகங்களில் மருந்துகளை அதிக விலையில் வாங்க வேண்டிய அவசியம் இல்லை.
- 1000 மருந்தகங்கள் – தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் திறக்கப்பட்டுள்ளன.
- B.Pharm, D.Pharm பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு – 1000 பேருக்கு வேலை கிடைத்துள்ளது.
- மருந்தகங்களை அமைக்க விருப்பமுள்ளவர்களுக்கு மானியம் – தனியார் தொழில்முனைவோருக்கு 3 லட்சம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.
- மருந்து கிடங்கு வசதி – 38 மாவட்ட மருந்து கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.
- 48 மணி நேரத்தில் மருந்துகள் விநியோகம் – மருந்துகளின் குறைவின்றி, அவை பத்திரமாக வழங்கப்படுவதற்காக எளிமையான விநியோக முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## மருந்து கிடங்கு மற்றும் விநியோகம்

முதல்வர் மருந்தகங்களுக்கான மருந்துகளை மாவட்ட மருந்து கிடங்குகளில் மூன்று மாதத்திற்குத் தேவையான அளவில் தொகுப்பாக வைத்திருக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் சாலிகிராமத்தில் மத்திய மருந்து கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது.

## விநியோக செயல்முறை

- மாவட்ட மருந்து கிடங்குகளில் இருந்து மருந்துகள் முதல்வர் மருந்தகங்களுக்கு 48 மணி நேரத்திற்குள் அனுப்பப்படுகின்றன.
- மாவட்ட மருந்து கிடங்குகள் ஏசி, குளிர்சாதனப்பெட்டி, ரேக்குகள், கணினி வசதி ஆகியவைகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.
- மருந்தாளுநர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு மூன்று கட்ட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## பொதுமக்களுக்கு கிடைக்கும் நன்மைகள்



- தள்ளுபடி விலையில் மருந்துகள் – மக்களுக்கு சிக்கனமான மருத்துவச் செலவினம்
- மருந்துகளின் தரத்திற்கான அரசு உத்திரவாதம் – மருந்துகளின் தரம் உறுதி செய்யப்படுகிறது.
- தொழில்முனைவோருக்கான வாய்ப்பு – மருந்தகங்களை அமைக்கும் புதிய தொழில் முனைவோருக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- மருத்துவ சேவையை மேலும் உறுதி செய்யும் அரசு திட்டம் – அனைவருக்கும் தரமான மருத்துவம் கிடைக்க வழிவகை செய்யும் முயற்சி.

## திட்டத்திற்கான பாராட்டுகள்

இந்த திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்திய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் மற்றும் அதிகாரிகள் முதலமைச்சரால் பாராட்டப்பட்டனர். மக்கள் நலன் கருதி மருத்துவச் செலவுகளை குறைக்கும் இந்த முதல்வர் மருந்தக திட்டம் தமிழகத்தின் திராவிட மாடல் ஆட்சியின் முக்கிய நெருடல் என்று வரவேற்கப்பட்டது.

## மக்கள் நலன்

1,000 'முதல்வர் மருந்தகம்' மருந்தகங்களைத் தொடங்குவது தமிழ்நாட்டில் சுகாதாரப் பராமரிப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு முக்கிய படியாகும். அத்தியாவசிய மருந்துகளை கணிசமாகக் குறைந்த விலையில் வழங்குவதன் மூலமும், பாரம்பரிய மருந்துகளை இணைப்பதன் மூலமும், இந்த முயற்சி தரமான சுகாதாரப் பராமரிப்பு சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் அணுகக்கூடியதாக இருப்பதை உறுதிசெய்கிறது. கூடுதலாக, மருந்தியல் பட்டதாரிகளுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், இந்தத் திட்டம் நோயாளிகளுக்கு பயனளிப்பது மட்டுமல்லாமல், மருந்துத் துறையையும் ஆதரிக்கிறது.

மருந்துகளின் விலை உயர்வு, அணுகல் மற்றும் தரம் ஆகியவற்றில் வலுவான கவனம் செலுத்தி, இந்தத் திட்டம், பொது சுகாதாரம் மற்றும் சமூக நலனுக்கான தமிழக அரசின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது, சுகாதாரப் பராமரிப்பை அதன் குடிமக்களுக்கு மேலும் உள்ளடக்கியதாகவும் நிதி ரீதியாக நிலையானதாகவும் ஆக்குகிறது.

தமிழ்நாடு அரசு மருத்துவப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்தி, தரமான மருத்துவத்தை அனைத்து மக்களுக்கும் அடையக் கூடியதாக மாற்றும் இந்த முன்னோடியான திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.❑

*இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி. கே.சேகர்பாபு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு.நா. முருகானந்தம், இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. க. நந்தகுமார். இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திரு. எஸ்.பி. அம்ரித், இ.ஆ.ப. உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

# முதல்வர் மருந்தகங்கள் மக்கள் நலனில் மாபெரும் புரட்சி!

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.02.2025 திறந்து வைக்கப்பட்ட முதல்வர் மருந்தகங்களின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் 13.03.2025 அன்று கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.*

## ஆய்வுக் கூட்டத்தின் நோக்கம் மற்றும் விவாதிக்கப்பட்டவை:

- மருந்தாளுநர்கள், தொழில் முனைவோர்கள் மற்றும் முதல்வர் மருந்துகளின் பயனாளிகள் ஆகியோருக்கிடையிலான விவாதம், இத்திட்டத்தின் குறை நிறைகளை ஆராய்ந்து மேம்படுத்த உதவும். மருந்துகளின் செயல்பாடு, பக்க விளைவுகள், மற்றும் பயனாளிகளின் அனுபவங்கள் ஆகியவை விவாதிக்கப்பட்டன.
- தொழில் முனைவோர்கள், மருந்துகளின் உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பான சவால்களைப் பற்றி பகிர்ந்து கொள்ளவும், மருந்துகளின் தரத்தை மேம்படுத்தவும், பயனாளிகளுக்கு சிறந்த சேவையை வழங்கவும் வழிவகுக்க விவாதிக்கப்பட்டன.
- மேலும், இத்திட்டத்தின் மேம்பாடு மற்றும் செயல்பாடுகள் குறித்தும், மருந்துகளின் அணுகல் மற்றும் பயன்பாட்டை அதிகரிக்கவும் விவாதிக்கப்பட்டது.
- புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், மருந்து விநியோகத்தை விரைவுபடுத்தலாம் மற்றும் பயனாளிகளின் தேவைகளை பூர்த்தி செய்யலாம் என விவாதிக்கப்பட்டது.

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்களின் உரையின் சுருக்கமான குறிப்புகள்

- மருந்தாளுநர்களுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேவையான கடனுதவியோடு மூன்று இலட்சம் ரூபாய் மானியம்.
- முதல்வர் மருந்தகங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகளான வாடிக்கையாளர்களை மிகுந்த மரியாதையோடு நடத்திட வேண்டும்.
- தேவையான மருந்து, மாத்திரைகளை இருப்பு வைத்து, பயனாளிகளுக்கு இருப்பு இல்லை என திருப்பி அனுப்பாமல் வழங்க வேண்டும்.



இந்நிகழ்வில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் திரு.சத்யபிரத சாகு,இ.ஆ.ப., அவர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திரு. எஸ்.பி அம்ரித் இ.ஆ.ப., அவர்கள் உட்பட இணைப்பதிவாளர்கள், துணைப்பதிவாளர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

- மருந்து கொள்முதல் பணிகள் தொய்வில்லாமல் செயல்பட வேண்டும்.
- TNMSC மருந்துகள், BRANDED மருந்துகள் இருப்பு பராமரிப்பு விபரம் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- முதல்வர் மருந்தகத்தின் செயல்பாடுகளை கண்காணிக்க Pharmacy counsel ஆலோசனை பெற்று Expect Committee குழு அமைத்திட வேண்டும்.
- அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் முதல்வர் மருந்தகங்கள் குறித்த விளம்பரப்பதாகைகள் அமைக்க வேண்டும்.
- மடிப்பேடுகள் தயார் செய்து பொதுமக்களுக்கு வழங்கிட வேண்டும்.
- மாவட்டங்களில் உள்ள உள்ளூர் தொகைக்காட்சிகளில் விளம்பரங்கள் ஒளிப்பரப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## கூட்டுறவுத்துறையின் பங்கு

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற அனைத்து சிறப்பு திட்டங்களையும் மக்களிடத்தில் கொண்டு சேர்க்கும் துறை கூட்டுறவுத்துறை.மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற அனைத்து சிறப்பு திட்டங்களையும் மக்களிடத்தில் கொண்டு சேர்க்கும் துறை கூட்டுறவுத்துறை.
- முதல்வர் மருந்தகங்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.❑



கடலூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்களின் குறை தீர்க்கும் பணியாளர் நாள் முகாம் கடலூர் மண்டல இணைப்பதிவாளர் திருமதி. சொ.இளஞ்செல்வி அவர்களின் தலைமையில் 14.03.2025 அன்று கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் வளாகத்தில் நடைபெற்றது. இம்முகாமில் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நியாவிலைக்கடை பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை மண்டல இணைப்பதிவாளர் அவர்களிடம் வழங்கினார்கள். இந்நிழ்ச்சியில் சிதம்பரம் சரக துணைப்பதிவாளர் திரு. செ.ரங்கநாதன், விருத்தாசலம் சரக துணைப்பதிவாளர் செல்வி. கு.சவிதா, விருத்தாசலம் கூட்டுறவு நகர வங்கியின் மேலாண்மை இயக்குநர் திரு.ஏ.கோகுல் இணைப்பதிவாளர் அலுவலக கண்காணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.


அமோக விளைச்சலை அள்ளித்தருமே

**கிரிப்கோ குருணை யூரியா**

UREA | BIO-FERTILISER | SEED




**கிரிஷக் பாரதி கோவாப்பரேட்டிவ் லிமிட்டெட்.,**

KRIBHCO

அறை எண். 1, 2 & 3, ஆயத்த ஆடை வளாகம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

*கூட்டுறவே! நாட்டுயர்வு !* *சேமிப்பீர் ! பயன்பெறுவீர்!*

# செங்கல்பட்டு கூட்டுறவு நகர வங்கி லிமிடெட்

## எண்.375 1,ராஜாஜி தெரு செங்கல்பட்டு

✦ மக்கள் சேவையில் 115 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 3 கிளைகளுடன் செயல்படும் வங்கி

✦ வங்கி நடைமுறை மூலதனம் ரூ. 116.56 கோடி வங்கி சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.

✦ நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படகிறது.

## குறைந்த வட்டி நிறைவான சேவை


**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

- ✦ நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- ✦ அனைத்து இட்டு வைப்புகளுக்கும் DICGC மும்பை இன்சூரன்ஸ் வசதி செய்யப்பட்டுள்ளது.
- ✦ வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- ✦ அனைத்துக் கிளைகளும் முழு கணினி வசதி
- ✦ மொத்த வைப்புக்கள் ரூ.110.14 கோடி
- ✦ மொத்த கடன்கள் ரூ. 87.00 கோடி

அரசு திட்டக்கடன்கள் சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாரா கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்கடன்கள். மகளிர் சுய உதவிக்குழுக்கடன் மற்றும் சிறு வணிகக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.L. கலையரசி B.Com.
பொதுமேலாளர்

திரு.பெ.வேணுகோபால்.. M.Sc., DCA., H.D.C.M.,
கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர்



துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (வரை)
THE TUDIYALUR CO-OPERATIVE AGRICULTURAL SERVICES LIMITED. NO. K. 1550
டியூகாஸ் பூச்சிக்கொல்லி மருந்துகள்
கோவை விதைகள்
ஒரே கூரையின் கீழ் அனைத்து இடுபொருட்களும்
TUCAS
வங்கிப் பணிகள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள் பயன்படுத்திய பயிர்கள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள்
Tudiyalur Post, Coimbatore - 641 034, TAMILNADU, INDIA
Phone : +91 0422 2642322, +91 0422-2642722, Fax: +91 0422-2642833
Email : tucas_1955@yahoo.co.in, info@tucas.org
Website : www.tucas.org

நம்ம ஊர் ... நம்ம கூட்டுறவு

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் ஆர்.625 ஸ்ரீரெங்கநாதா கூட்டுறவு பண்டகசாலை

ஆர்.625 ஸ்ரீ ரெங்கநாதா கூட்டுறவு பண்டகசாலை 16.04.1940 அன்று பதிவு செய்யப்பட்டு, 26.04.1940 முதல் செயல்படத் துவங்கியது. இப்பண்டகசாலை 3833 உறுப்பினர்களுடன் ரூ.3,03,140/– பங்கு மூலதனத்துடன் செயல்பட்டு வருகிறது. இப்பண்டகசாலை திருவளர்ச்சோலை, திருவரங்கம், திருவானைக்கோவில், ஸ்ரீரங்கம், மேலூர் ஆகிய பகுதிகளை விவகார எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.




## பொது விநியோகத் திட்டம்

ஆர்.625 ஸ்ரீரெங்கநாதா கூட்டுறவு பண்டகசாலை மூலம் 10 முழுநேர நியாயவிலைக் கடைகள் மற்றும் 1 மண்ணெண்ணெய் பங்கும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் 10097 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

## மருந்தகம்

ஆர்.625 ஸ்ரீரெங்கநாதா கூட்டுறவு பண்டகசாலை மூலம் இரண்டு மருந்தகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மருந்தகங்கள் மூலம் பொதுமக்களுக்கு 20% தள்ளுபடியில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மார்ச் 2024 வரை மருந்து பொருட்கள் ரூ.90.99 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## ஆவின் பாலகம்

ஆர்.625 ஸ்ரீரெங்கநாதா கூட்டுறவு பண்டகசாலையின் மூலம் 06.09.2019 முதல் ஆவின் பாலகம் செயல்பட்டு வருகிறது. ஆவின் தயாரிப்புகளான பால், நெய், மோர், பிஸ்கட் மற்றும் ஸ்வீட், கார வகைகள் ஆகியவை வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மார்ச் 2024 வரை ரூ.71.23 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.




## சிமெண்ட் விற்பனை

ஆர்.625 ஸ்ரீரெங்கநாதா கூட்டுறவு பண்டகசாலை மூலம் வலிமை சிமெண்ட் விற்கப்பட்டு வருகிறது. வெளிச்சந்தை விலையை காட்டிலும் குறைவாகவே சிமெண்ட் விற்கப்பட்டு வருகிறது. மார்ச் 2024 வரை ரூ.5.40 இலட்சம் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## மளிகை பொருட்கள் விற்பனை

ஆர்.625 ஸ்ரீரெங்கநாதா கூட்டுறவு பண்டகசாலை மூலம் மளிகை பொருட்கள் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக ஸ்ரீரெங்கநாதா கோவிலுக்கு, அன்னதானம், திருமஞ்சனம் மற்றும் இதர இனங்களுக்காக மளிகைப் பொருட்களும் விநியோகம் செய்யப்படுவது இதன் தனிச்சிறப்பாகும். மார்ச் 2024 வரை மளிகைப் பொருட்கள் ரூ416.49 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.




## மலிவு விலையில் காய்கறிகள்

ஆர்.625 ஸ்ரீரெங்கநாதா கூட்டுறவு பண்டகசாலையின் மூலம் மலிவு விலையில் காய்கறிகள் நல்ல தரமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இப்பண்டகசாலையின் எல்லைக்குட்பட்ட திருவடி தெரு, ரெங்காநகர் மற்றும் மேலூர் ரோட்டில் காய்கறி அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. வெளிச்சந்தையில் காய்கறிகள் குறிப்பாக தக்காளி விலை மிகையாக (Exorbidant hike) அதிகரிக்கும் போது இப்பண்டகசாலையில் குறைந்த விலையிலேயே தக்காளிகள் விற்கப்பட்டு வருவது இப்பண்டகசாலையின் தனிச்சிறப்பாகும். இதை தவிர தீபாவளி பண்டிகை நாட்களில் பொது மக்களுக்கு தரமாகவும், குறைந்த விலையிலும் பட்டாசுகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு நல்ல தரமான சேவைகள் வழங்கி வருவதோடு மட்டுமில்லாமல் சிறந்த பண்டகசாலையாக தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக தேர்வு செய்யப்பட்டும் தொடர்ந்து வெற்றிப் பாதையில் நடைபோட்டுக்கொண்டு செயல்பட்டு வருகிறது.❑

*நம்ம ஊர் ... நம்ம கூட்டுறவு.. பக்கத்திற்கு கூட்டுறவு சங்கங்களின் பற்றிய கட்டுரைகள் புகைப்படங்களுடன் வரவேற்கப்படுகிறன்றன.*

சேமிக்க சிறந்த வங்கி ! 100 ஆண்டு பாரம்பரியமிக்க வங்கி !!

# புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

புதுக்கோட்டை

அன்புடையீர் !

புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் 28 கிளைகளுடன் 104 ஆண்டுகளை கடந்து மக்கள் சேவை புரிந்து வருகிறது.

## எங்களது சிறப்பம்சங்கள்:-

★ மைய வங்கியியல் சேவை ★ UPI சேவை. ★ துரித பணப்பரிமாற்ற சேவை (RTGS/NEFT/IMPS)
★ ATM சேவை (ATM Debit Card / KCC Card) ★ குறுந்தகவல் சேவை (SMS)
★ செல்லிடை வங்கிச் சேவை (Mobile Banking) ★ தனிநபர் பாதுகாப்பு பெட்டக (Locker) வசதி
★ அரசின் அனைத்து மானியங்களும் பெறும் இணையதள வசதி.
★ அடமான நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி

## விரைவு நகைக்கடன் சேவை

கிராம் ஒன்றுக்கு ரூ.5,000/-

- ஒரு நபருக்கு 30.00 இலட்சம் வரை மிகக்குறைந்த வட்டி விகிதம்.
- மிகக்குறைந்த நகை பரிசீலனை கட்டணம்.
- கூட்டு வட்டி கிடையாது.
- அனைத்து வேலைநாட்களிலும் நகைக்கடன் வழங்கப்படுகிறது.
- தங்க நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி.



## மிகக்குறைந்த சாதாரண வட்டியில் கடன்பெற

வீட்டு அடமான கடன் அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரை



புதிய வீடு கட்ட குறைந்த வட்டியில் ரூ.75.00 இலட்சம் வரை

எந்தவித மறைமுக கட்டணம் இல்லை... கடன் சலுகை சாதாரண வட்டி.

தவணைக்காலம் 50 வாரங்கள் | சிறு வணிகக் கடன் உயர்ந்தபட்சமாக கடன் தொகை ரூ.1,00,000 வரை | தகுதியுடையவர்கள் : பூ கடை, பழக்கடை, காய்கறி கடை, வெட்டிக்கடை, மளிகைக்கடை, மீன்கடை, துணி வியாபாரம்.

## கடன் சேவைகள்

- நகைக்கடன் • தனிநபர் சிறு வணிகக்கடன்
- சுய உதவிக்குழு கடன் • டாம்கோ கடன்
- டாப்செட்கோ கடன் • மாற்றுத்திறனாளிகள் கடன்
- தனிநபர் சம்பள கடன் • மகளிர் தொழில் முனைவோர் கடன்
- பணிபுரியும் மகளிர் கடன் • பண்ணை சாரா கடன்
- வீடு கட்டும் கடன் • வீட்டு அடமானக் கடன்
- கைம்பெண்கள் (ம) கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- வேளாண் (ம) ஊரக வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு 0% வட்டியில் பயிர்க்கடன் மற்றும் குறைந்த வட்டியில் மத்திய கால கடன்கள்.

## நிரந்தர வைப்புக்கு வட்டி விகிதம்

| காலம் | பொது | மூத்த குடிமக்கள் |
|---|---|---|
| 7 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 7.00% |
| 1 வருடம் முதல் 3 வருடம் வரை | 8.00% | 8.25% |
| 3 வருடத்திற்கு மேல் | 8.00% | 8.25% |

## சிறப்பு திட்டங்கள்

- பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)
- பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டம் (PMSBY)
- பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டம் (PMJJBY)

## வணிக வங்கிகளுக்கு இணையான டிஜிட்டல் வசதிகள் கொண்ட வங்கி

UPI PAYMENTS

NEFT & RTGS

Mobile Banking → IMPS

MICRO ATM

வங்கியின் சேவைகள் ! உங்கள் கையில் !!

வாடிக்கையாளர்கள் டிஜிட்டல் சேவையை பயன்படுத்தி கொள்ளவும்.

வங்கியில் முதலீடு செய்துள்ள வைப்புகளுக்கு DICGC நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் நேசமிகு துரித சேவையே வங்கியின் நோக்கம்

இன்றே அணுகுவீர்! வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 27 கிளைகள்

## சிரிப்பதற்கு மட்டும்....



படித்த ஒருத்தன் கிராமத்துக்கு போறான்.. அங்கே ஒரு செக்குமாடு மட்டும் தனியா சுத்திட்டு இருக்கு, அவனுக்கு ஆச்சரியமா இருந்தது. பக்கத்தில ஒரு குடிசையில் ஒரு விவசாயி இருந்தார்.

படித்தவன் :- 'மாடு மட்டும் தனியா செக்கு சுத்திட்டு இருக்கே..?



விவசாயி அது பழகின மாடு தம்பி... அதுவே சுத்திக்கும்...

படித்தவன் :- நீங்க உள்ளே வந்த உடனே அது சுத்தறத நிறுத்திட்டா...! எப்படி கண்டுபிடிப்பீங்க..?

விவசாயி - அது கழுத்தில ஒரு சலங்கை இருக்கு தம்பி.

சுத்தறதை நிறுத்திட்டா அந்த சலங்கை சத்தம்வராது,அதை வெச்சி கண்டுபிடிச்சிடுவேன்..

படித்தவன் :- 'அது சுத்தறதை நிறுத்திட்டு ஒரே இடத்துல நின்னு தலைய மட்டும் ஆட்டினா அப்ப எப்படி கண்டுபிடிப்பீங்க..?

விவசாயி 'இதுக்குதான் தம்பி... நான் என் மாட்டை காலேஜுக்கெல்லாம் படிக்க அனுப்பலை..!

படித்தவன் : ? ? ? ? ? !


**கூட்டுறவே நாட்டுயர்வு!** **சேமிப்பீர் பயன்பெறுவீர்!**

## ஜி 2193 தென்மேல்பாக்கம் நகர கூட்டுறவு கடன் சங்கம்

- **மக்கள் சேவையில் 54 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 1 கிளையுடன் செயல்படும் சங்கம்.**
- **சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.102.00 கோடி சங்கம் சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.**
- **நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படுகிறது.**

**குறைந்த வட்டி நிறைவான சேவை**

- **நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/- வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.**
- **வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.**
- **முழு கணினி வசதி**
- **மொத்த வைப்புக்கள் ரூ.46,93 கோடி**
- **மொத்த கடன்கள் ரூ.60.19 கோடி**

**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

அரசு திட்டக்கடன்கள் சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாரா கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்கடன்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கடன் மற்றும் சிறு வணிகக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.க.செண்பகவள்ளி, B.Com,M.B.A. D.Coop., செயலாளர்

திரு.சுரீன் விஜய், H.D.C.M., கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர்

# ஆரோக்கியத்திற்கு ஒரு சூப்பர்ஃபுட்! "கேழ்வரகு"



## கேழ்வரகு – சிறுதானிய மன்னன்!

கேழ்வரகு ஆண்டுக்கொரு முறை விளையும் தானியப் பயிர் ஆகும். இதன் வேறு பெயர்கள் ஆரியம், ராகி மற்றும் கேப்பை. எத்தியோப்பியாவின் உயர்ந்த மலைப் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட இப்பயிர் ஏறத்தாழ 4000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட மிக பழமையான ஒரு சிறுதானியமாகும். இதன் அறிவியல் பெயர் Eleusine coracana ஆகும். ஆங்கிலத்தில் Finger Millet எனவும் அழைக்கப்படுகிறது. கேழ்வரகு சாகுபடி செய்வதில் கர்நாடகாவும், தமிழ்நாடும் முதன்மை மாநிலங்களாக திகழ்கின்றன. இது தவிர ஆந்திரப்பிரதேசம், உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களிலும் கேழ்வரகு சாகுபடி செய்யப்படுகிறது.

ராகி, சிறப்பான ஆரோக்கிய நன்மைகள் கொண்டது மட்டுமல்லாமல், பலவித உணவுகளில் பயன்படுத்தப்படுகிறது. இது தென்னிந்தியாவில் முக்கியமான சிறுதானியமாக விளங்குகிறது. சாதாரண மக்களுக்குத் தகுந்த விலையில் கிடைப்பதும், அதிக ஊட்டச்சத்து நிறைந்ததும், நீண்டகால வாழ்க்கைக்கு வளம் தருவதும் இதன் சிறப்புகள் ஆகும்.

### கேழ்வரகு பயிரிடும் முறை (Cultivation Process)

கேழ்வரகு வெப்ப மண்டலம் மற்றும் மித வெப்ப மண்டலப் பகுதிகளில் பயிர் செய்யப்படுகிறது. இந்தியாவில் அதிகமாக பயிர்



செய்யப்படுவதோடு ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், இலங்கை, மலேசியா, சீனா மற்றும் ஜப்பானில் பயிர் செய்யப்படுகிறது. இந்தியாவில் கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரா, ஒரிசா, குஜராத், மஹாராஷ்டிரா மற்றும் உத்திரபிரதேசம் மற்றும் இமாச்சலபிரதேசம் மலைப்பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது.

## மண் மற்றும் காலநிலை

கேழ்வரகு பெரும்பாலும் வறண்ட நிலத்திலும் குறைவான மழையுள்ள இடங்களிலும் வளரக்கூடிய பயிராகும்.

- வளர்ச்சிக்கு ஏற்ற வெப்பநிலை: 25°C – 32°C
- மண் வகை: சிவப்பு மண்சார்ந்த மண், கரும்புச்சேறு மண் மற்றும் கடல் மணல் கலந்த மண்ணில் நன்றாக வளரும்.


கூட்டுறவே! **இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,** நாட்டுயர்வு!

தபால் பெட்டி எண்.25, 265, E, வண்டிக்கார தெரு. இராமநாதபுரம்-623501.

✆ : 04567-221245 rdccbank@gmail.com www.rdccbankco.in

தலைமையகம் உட்பட மாவட்டம் முழுவதும் 32 கிளைகளுடன் வாடிக்கையாளர் சேவையில் 104வது ஆண்டில் செயல்பட்டு வருகிறது.

**இட்டு வைப்புகளுக்கான வட்டி விகிதம்**

| வ. எண். | விபரம் | சாதாரண மக்களுக்கு | மூத்த குடிமக்கள் |
|---|---|---|---|
| 1. | 31 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 5.50% | 5.50% |
| 2. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.85% | 5.85% |
| 3. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.30% | 6.30% |
| 4. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.85% | 6.85% |
| 5. | 1 வருடத்திற்கு | 8.00% | 8.25% |
| 6. | மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு வருடத்திற்கு | 8.25% | 8.50% |

நிறுவனங்கள் / கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெறப்படும் பெரு இட்டு வைப்புகளுக்கு (Bulk Deposit) 1 வருடத்திற்கு ரூ. 5.00 கோடி மற்றும் அதற்கு மேல் 8.50% வட்டி வழங்கப்படுகிறது.

**கடன் வசதிகள்**

❁ குறைந்த வட்டியில் தனி நபர் நகைக்கடன் ❁ மகளிர் சுயஉதவிக்குழுக்கடன் ❁ மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லாக் கடன் ❁ நெசவாளர்களுக்கு மானியத்துடன் கூடிய முத்ரா கடன் ❁ ஆதரவற்ற விதவைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் ❁ வீடு கட்டும் மற்றும் வீட்டு அடமானக் கடன் (குறைந்த வட்டியில்) ❁ சிறுவணிகக்கடன், பணிபுரியும் மகளிர் கடன்

**வங்கிச் சேவைகள்**

❁ தனிநபர் பாதுகாப்பு பெட்டக வசதி ❁ விரைவு பண பரிவர்த்தனை சேவை (NEFT & RTGS) ❁ ATM மற்றும் நடமாடும் ATM வசதி ❁ Mobile Banking ❁ விவசாயிகளுக்கு KCC Rupay Card, POS மற்றும் Micro ATM மூலம் பணம் பட்டுவாடா வசதி ❁ LPG Gas சமையல் எரிவாயு மானியம் பெறும் வசதி ❁ தனிநபர் பாதுகாப்பு பெட்டக வசதி ❁ G Pay, Phone Pay, PayTM, UPI, IMPS, AEPS

பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீம யோஜனா (PMJBY) காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

## விதைப்பு (Sowing Process)

- விதைப்பு நேரம்: ஜூன் – ஜூலை (மோசமான மழைக்காலம்), அக்டோபர் – நவம்பர் (சமையல் பயிர்)
- விதைகளை நோய்கள் வரும் வாய்ப்பு குறைக்க உரமிடும் நீரில் ஊறவைத்து பிறகு விதைக்க வேண்டும்.
- நிலத்தை நன்கு உழுது விதைகளை அடுக்கம் முறையில் பரப்பி விதைக்கலாம்.

## பாசன முறைகள் (Irrigation & Water Management)

- அதிக நீர் தேவைப்படாத பயிராகும்.
- 15 நாட்களுக்கு ஒரு முறை நீர் ஊற்றி பராமரிக்கலாம்.
- அதிகப்படியான மழை நீர் தேங்காமல் இருக்கவேண்டும்.

## உரங்கள் மற்றும் பூச்சி பாதுகாப்பு

- இயற்கை உரங்கள்: மாட்டுசாணம், செம்மண், நாட்டு உரம்
- பூச்சி தாக்குதல்: வண்டு மற்றும் நண்டு போன்றவை தாக்கலாம், இவை இயற்கை பூச்சிக்கொல்லி மூலம் கட்டுப்படுத்தலாம்.

## அறுவடை (Harvesting)

- விதைப்பு செய்த 90–110 நாட்கள் கழித்து அறுவடை செய்யலாம்.
- அறுவடை செய்த பிறகு வியாபார ரீதியாக உலர்த்தி சேமிக்கலாம்.
- உலர்த்திய பிறகு, ராகி மாவு தயாரிக்கின்றனர், இது பல உணவுகளில் பயன்படுத்தப்படுகிறது.

## கேழ்வரகின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய நன்மைகள்

கேழ்வரகில் அதிகளவில் நார் சத்து, இரும்புசத்து, புரதம், கால்சியம்,

பாஸ்பரஸ் போன்ற முக்கிய ஊட்டச்சத்துக்கள் உள்ளன. அதிக ஊட்டச்சத்துகள் கொண்டதால், இது **"சூப்பர்ஃபுட்" (Superfood)** என அழைக்கப்படுகிறது.

- கேழ்வரகில் அதிக நார்ச்சத்து (fiber) இருப்பதால், ஜீரணத்திற்கு உகந்தது.
- கேழ்வரகில் மற்ற தானியங்களை விட ராகியில் மிக அதிகமான கல்சியம் உள்ளது. இது எலும்புகளுக்குத் தேவையான பலத்தை தருகிறது.
- இரும்புச்சத்து அதிகம் இருப்பதால், இரத்தச்சோகையை (Anemia) தடுக்கும்.
- ராகி குளுக்கோஸ் அளவை கட்டுப்படுத்துவதால், நீரிழிவு (Diabetes) நோயாளிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

## உடலுக்கு கிடைக்கும் நன்மைகள்



- நீரிழிவு (Diabetes) நோயாளிகளுக்கு ஆக்ஸிஜனேற்றத்தைக் கட்டுப்படுத்தி, குளுக்கோஸ் சீராக வெளிவர உதவுவதால், இரத்த சர்க்கரை (Blood Sugar) அதிகரிக்காமல் தடுக்கும்.
- **எலும்புகளுக்கு பலம் தரும் :** அதிகமான கால்சியம் உள்ளதால், குழந்தைகள் மற்றும் வயதானவர்களுக்கு மிகவும் பயன்படுகிறது.
- **எடை குறைப்பு :** நார்ச்சத்து அதிகம் இருப்பதால், வயிறு நிறைவாக இருக்கும், அதனால் அதிக உணவு உண்ணாமல் கட்டுப்படுத்தலாம். .
- **மனச்சோர்வை குறைக்கும் :** இதில் உள்ள Tryptophan என்னும் அமினோ அமிலம் மனச்சோர்வு, டிப்ரஷன் ஆகியவற்றை குறைக்க உதவும்.
- **கொலஸ்ட்ராலை கட்டுப்படுத்தும் :** இதிலுள்ள நச்சுப்பழுக்குகள் உடலில் கொழுப்பை குறைக்கும்.

## ராகியை எவ்வாறு பயன்படுத்தலாம்?

- ராகி கூழ் (Ragi Porridge) : குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் சிறந்த காலை உணவு.
- ராகி அடை (Ragi Dosa) : ஆரோக்கியமான காலை உணவாக முடியும்.
- ராகி ரொட்டி (Ragi Roti): சாதாரண கோதுமை ரொட்டிக்கு மாற்றாக சாப்பிடலாம்.
- ராகி புட்டு: தேன் அல்லது தேங்காய் சேர்த்து உணவாக கொள்ளலாம்.
- ராகி பால் (Ragi Malt) : அதிக ஊட்டச்சத்து தரும், எளிதாகக் குடிக்கக்கூடிய ஒரு பானம்.

ராகி ஒரு மிகச் சிறந்த இயற்கை உணவு. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் இதை உணவில் சேர்த்தால், ஆரோக்கியமான வாழ்க்கையை எளிதில் நடத்தலாம். இனி உங்கள் உணவுப் பழக்கத்தில் ராகியை அடிக்கடி சேர்த்துகொள்ளுங்கள்!

**உங்கள் ஆரோக்கியம் உங்கள் கையில்!**

தரவுகள் இணையத்திலிருந்து பெறப்பட்டவை


கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

**G 3414 காயரம்பேடு நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட்.,**

- மக்கள் சேவையில் 54 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 1 கிளையுடன் செயல்படும் சங்கம்.
- சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.96.00 கோடி சங்கம் சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.
- நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 7.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 7.50% வட்டியும் வழங்கப்படகிறது.

**குறைந்த வட்டி நிறைவான சேவை**

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- முழு கணினி வசதி
- மொத்த வைப்புக்கள் ரூ.53.69 கோடி
- மொத்த கடன்கள் ரூ.62.01 கோடி

5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்

அரசு திட்டக்கடன்கள் சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாரா கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்கடன்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கடன் மற்றும் சிறு வணிகக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.ஏ,ஜெயஸ்ரீ, D.Coop.,
செயலாளர்

திரு.சுரீன் விஜய், H.D.C.M.,
கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர்

*கூட்டுறவே! நாட்டுயர்வு !* *சேமிப்பீர் ! பயன்பெறுவீர்!*

# தாம்பரம் கூட்டுறவு நகர வங்கி லிமிடெட் J.J.46

14, வெங்கடேசன் தெரு, மேற்கு தாம்பரம்,
சென்னை–600 045. ☎.22266583

✦ **மக்கள் சேவையில் 71 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 2 கிளைகளுடன் செயல்படும் வங்கி**

✦ **வங்கி நடைமுறை மூலதனம் ரூ.66 கோடி வங்கி சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.**

✦ **நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படகிறது.**

## குறைந்த வட்டி நிறைவான சேவை

**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

- ✦ நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- ✦ அனைத்து இட்டு வைப்புகளுக்கும் DICGC மும்பை இன்சூரன்ஸ் வசதி செய்யப்பட்டுள்ளது.
- ✦ வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- ✦ அனைத்துக் கிளைகளும் முழு கணினி வசதி
- ✦ மொத்த வைப்புக்கள் ரூ.53.98 கோடி
- ✦ **மொத்த கடன்கள் ரூ. 46.99 கோடி**

**அரசு திட்டக்கடன்கள் சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாரா கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்கடன்கள். மகளிர் சுய உதவிக்குழுக்கடன் மற்றும் சிறு வணிகக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.**

**திரு.V.சங்கர் B.Com.**
**பொதுமேலாளர்**

**திரு. ச.தசரதன்.,B.Sc.,B.Ed.,**
**கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர்**

# கூட்டுறவில் மகளிர்

## சமூக மாற்றத்தின் சக்தி

"உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்
உயிரினுக்கு உயிராய் இன்பம் ஆகிடும்
உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா
ஊது கொம்புகள் ஆடு களிகொண்டே"

என்று பெண்களை போற்றும் மகாகவி பாரதியார், பெண்கள் முன்னேறினால் நாடு முன்னேறும் என்று ஆணித்தரமாக நம்பினார். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று பெண்களின் பெருமையை உலகிற்கு உரக்கச் சொன்னார். பாரதியாரின் கனவை நனவாக்கும் வகையில், இன்று பெண்கள் சமூகத்தின் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். விவசாயம், தொழில்கள், தொழில்முனைவோர் முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பெண்களின் பங்கு மிக முக்கியமானதாக மாறியுள்ளது. குறிப்பாக, கூட்டுறவுச் சங்கங்கள் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வலுவான அடித்தளமாக விளங்குகின்றன,

## கூட்டுறவின் நோக்கம்

கூட்டுறவு என்பது சமூக பொருளாதார மேம்பாட்டின் அச்சாணியாக பின்வருவனவற்றை அடிப்படையாக கொண்டு செயல்படுகிறது.

- சமூக பொருளாதார மேம்பாடு
- சுய உதவி
- சமத்துவம்
- உறுப்பினர்களின் நலன்

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயக்கம். இந்த நான்கு கூறுகளும் ஒன்றிணைந்து செயல்பட்டால், ஒரு சமூகம் நிலையான வளர்ச்சியை அடைய முடியும். இது வறுமை,



வேலையில்லா திண்டாட்டம் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க உதவுகிறது. மேலும், இது சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்துகிறது மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் கூட்டுறவு சாத்தியமாகிறது.

## கூட்டுறவு சங்கங்களில் பெண்களின் பங்கு

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சுய உதவி குழுக்கள், பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் மற்றும் தன்னிறைவுக்கான பாதையை திறக்கின்றன. இதில் தலைமை பொறுப்பேற்கும் பெண் தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகத்தில் முக்கியப் பங்கு வகித்து, சிறந்த தலைவர்களாக உருவாகின்றனர். பெண் பணியாளர்கள், கூட்டுறவு சங்கங்களில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு, பொருளாதார ரீதியாக முன்னேறுகின்றனர். தொழில் முனைவோர், சுய உதவி குழுக்கள் மூலம் சிறு தொழில்கள் தொடங்கி, பொருளாதார தன்னிறைவு அடைகின்றனர்.

மேலும், பெண்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்வதன் மூலம், தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும். அவர்கள் கடன், சேமிப்பு, மற்றும் பிற நிதி சேவைகளை அணுகவும், தங்கள் பொருட்களை சந்தைப்படுத்தவும், தங்கள் தொழில்களை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றனர்.

சுய உதவி குழுக்கள், சிறு தொழில்களைத் தொடங்கவும், பொருளாதார தன்னிறைவு அடையவும் ஒரு சிறந்த வழியாகும். கூட்டுறவுச் சங்கங்கள், பெண்கள் மற்றும் பிற விளிம்பு நிலை மக்களுக்கு அதிகாரம் அளிக்கவும், அவர்களின் சமூகங்களில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் உதவுகின்றன.

## கூட்டுறவில் பெண்களுக்கான திட்டங்கள்

கூட்டுறவுத் துறையில் பெண்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தையல், உற்பத்தி, விற்பனை போன்ற பணிகளுக்கான பயிற்சி, கடன் வசதி, சந்தை வாய்ப்புகள் போன்றவை வழங்கப்படுகின்றன. சமூக நலத்துறை இயக்குநரகத்தின் கீழ், மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பின்வரும் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன,

| வ. எண். | சங்கங்களின் வகை | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் | 84 | 80,592 |
| 2 | மகளிர் எழுதுபொருள் தயாரிக்கும் தொழிற்துறை கூட்டுறவு சங்கங்கள் ( தையல் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர்) | 15 | 4,428 |
| 3 | இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் | 25 | 1,350 |
| 4 | திருநங்கையர் தையற் தொழிற்கூட்டுறவு சங்கம் | 1 | 68 |

** வருமான வரம்பு: மேற்படி திட்டத்திற்காக, ஆண்டு வருமான வரம்பு ரூ. 1,20,000/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது

** தரவுகள் : சமூக நலத்துறை இணையதளம்

# மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,



187, வடக்கு வெளி வீதி, மதுரை - 625 001.

தொலைபேசி எண் : 0452 - 2342051 முதல் 2342054 Fax : 0452 - 2345747

mdccbank@rocketmail.com, Post Box No. : 14

E-mail : mdccbank@rocketmail.com

## மக்கள் சேவையில் 112 ஆண்டுகள்

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் தலைமை அலுவலகம் மற்றும் 45 கிளைகளுடன் பொது மக்களின் பேராதரவால் ஒரு நூற்றாண்டைக் கடந்து சீரும் சிறப்புடன் செயல்பட்டு சேவை செய்து வருகின்றது

**வங்கியின் வைப்புத் தொகை : ரூ. 169131.52 இலட்சம்**

**வங்கி வழங்கியுள்ள கடன் தொகை : ரூ. 241767.32 இலட்சம்**

### வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகைகளுக்கு வங்கி வழங்கும் வட்டி விகிதம்

| | |
|---|---|
| சேமிப்பு கணக்கு (தினசரி நிலுவைக்கு) | 3.00% |
| கால வைப்புகள் | |
| 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 3.00% |
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.50% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.50% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 7.00% |
| 12 மாதங்கள் முதல் அதற்கு மேலும் | 7.50% |

60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் இட்டு வைக்கும் வைப்புகளுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படுகிறது.

### தலைமை அலுவலகம் மற்றும் வங்கி கிளைகள் மூலம் வழங்கப்படும் கடன்கள்

* தனி நபருக்கு ரூ. 30.00 இலட்சம் வரை மிகக் குறைந்த வட்டியில் நகைக்கடன்
* புதிதாக வீடு கட்டுவதற்கான கடன் மற்றும் வீட்டு அடமானத்தின் பேரில் அடமானக் கடன்
* தொழில் முனைவோருக்கான கடன்
* சிறு வணிகக் கடன் மற்றும் சிறு வணிக கூட்டுப்பொறுப்புக் குழுக் கடன்
* விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்கள்
* மகளிர் சுய உதவிக் குழுக் கடன்
* பணிபுரியும் மகளிருக்கு கடன்
* கிளைகள் மூலம் மத்திய கால முதலீட்டுக் கடன்
* மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்
* MSME சிறுத் தொழில் உரிமையாளர்கள் / பங்குதாரர் நிறுவனங்கள்/ கம்பெனிகள் மற்றும் கூட்டுக் குழுக்களுக்குக் கடன்

இது போன்ற பலவகையான கடன்கள் வழங்கப்படுகின்றது. மேலும் விபரங்கள் தெரிந்து கொள்ள மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 45 கிளைகளை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

**மேலும் வாடிக்கையாளர்களுக்கு**

* குறைந்த வாடகையில் பாதுகாப்பு பெட்டக வசதி
* ATM (தானியங்கி பணம் கொடுக்கும் இயந்திரம்) வசதி
* RTGS & NEFT வசதி உள்ளது.
* அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking Service)
* விரைவில் இணையதள வங்கி சேவை (Net Banking Facility)

**செயல்பாட்டில் உள்ள வங்கியின் புதிய திட்டம்**

சிறுவர் / சிறுமியர்களுக்கான கண்மணி சேமிப்பு திட்டம். இத்திட்டத்திற்கு சாதாரண சேமிப்புக்கு வழங்கப்படும் வட்டியைக் காட்டிலும் கூடுதலாக 1% சேர்த்து 4% வட்டி வழங்கப்படும்.

**"இன்றைய சேமிப்பு ! நாளைய பாதுகாப்பு"**

**"கூட்டுறவு வங்கியில் சேமிப்பீர் வாழ்வை வளமாக்குவீர்"**

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

- மகளிர் சுய உதவி குழுக்கள்: பெண்களுக்கு சிறு தொழில் தொடங்கவும், சேமிப்பு பழக்கத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன.
- மகளிர் கடன் திட்டங்கள்: பெண்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கி, தொழில் தொடங்க உதவுகின்றன.
- பயிற்சி திட்டங்கள்: பெண்களுக்கு தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கி, அவர்களின் வருமானத்தை அதிகரிக்க உதவுகின்றன.
- சந்தை வாய்ப்புகள்: பெண்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்த உதவுகின்றன.

## கூட்டுறவினால் பெண்கள் பெறும் பயன்கள்

கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்த பிறகு, எனது வாழ்க்கை மாறியது. சுய உதவி குழு மூலம் கடன் பெற்று, சிறு தொழில் தொடங்கி, இன்று நான் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்கிறேன்" என்று பல பெண்கள் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

கூட்டுறவு சங்கங்கள், பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமின்றி, சமூக மேம்பாட்டிற்கும் முக்கியப் பங்காற்றுகின்றன. பெண்கள் பொருளாதார ரீதியாக முன்னேறும்போது, அவர்களின் குடும்பம் மற்றும் சமூகம் மேம்படுகிறது.

பெண்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பங்கேற்பதன் மூலம் பொருளாதார சுயாதீனம், சமூக முன்னேற்றம், மற்றும் பாலின சமத்துவத்தை மேம்படுத்துகின்றனர். பல தடைகள் இருந்தாலும், பெண்களின் பங்கேற்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பொருளாதார வளங்கள், திறன் மேம்பாடு, மற்றும் தலைமைத் திறமைகளுக்கு வாய்ப்புகள் வழங்குவதன் மூலம், கூட்டுறவுச் சங்கங்கள் பெண்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதில் முக்கிய பங்காற்றுகின்றன.

பாரதியாரின் கனவை நனவாக்கும் வகையில், பெண்கள் கூட்டுறவு சங்கங்களில் அதிக அளவில் பங்கேற்று, பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றம் பெற வேண்டும்.❑

–அனிதா சண்முகம்
புத்தக வடிவமைப்பாளர் (கூட்டுறவு)

t

*கூட்டுறவே!* *நாட்டுயர்வு!*

# சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

சேரி ரோடு, சேலம் –630001, தொலைபேசி எண்: 0427–2451761–765
Email : slm_sdccbslm@yahoo.co.in & devtsdccb@gmail.com
Website : www.salemdccbank.com

**தமிழ்நாடு அரசிடம் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறந்த சேவை புரிந்ததற்காக 8 முறை விருது பெற்ற வங்கி**

**அகில இந்திய அளவில் சிறந்த வங்கிக்கான விருது பெற்ற வங்கி இட்டுவைப்புகளுக்கு அதிக வட்டி விகிதம்**

**8.00%***

**ரூ.50.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் இட்டுவைப்பு தொகைக்கு சிறப்பு வட்டி விகிதம்**

**8.25%***

**வங்கியின் மூலம் வழங்கப்பட்டு வரும் கடன்களின் விபரம்**

- நகைக்கடன்
- வீட்டு வசதிகடன், வீடு அடமான கடன்
- சம்பளக்கடன், பணிபுரியும் மகளிர்
- ஆடவர் / மகளிர் சிறுவணிகக்கடன்
- கைம்பெண் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- மாற்றுத்திறனாளி கடன், மாற்று பாலினத்தவருக்கான வணிக கடன்)
- கைம்பெண் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- மாற்றுத்திறனாளி கடன், மாற்று பாலினத்தவருக்கான கடன்
- நுகர்பொருள் கடன், வாகன கடன்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- சுய உதவிக்குழு கடன், கூட்டுப்பொறுப்பு குழு கடன்
- வீட்டு மனை (Plot) வாங்க கடன், வாங்கிய மனையில் வீடு கட்ட கடன்
- நாட்டுப்புற கலைஞர்கள் மற்றும் கலைபொருட்கள் தயாரிக்கும் பணியில் உள்ளவர்களுக்கு கடன் (Folk Artist & Artisans)
- கல்விக்கடன் (Education Loan), உணவு பதப்படுத்தும் காரியத்திற்கு கடன் (PMFME), MSME கடன்
- டாம்கோ கடன், டாப்செட்கோ கடன்
- கலைஞரின் கனவு இல்லம், மறு அடமானக் கடன் (மூத்தகுடிமக்கள்)
- சூரிய ஒளி ஆற்றல் மூலம் மின்உற்பத்தி சாதனம் நிறுவ கடன் (Solar Panel)
- RTGS, NEFT மற்றும் Mobile Banking, Gpay, Phoepee, UPI, வசதிகள்

**தங்களது தேவைகளுக்கு அருகில் உள்ள சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளை அணுகவும்**

கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர்



# இன்று ஒரு தகவல்

# சுவர்க்கமும் நகரமும்!

ஒரு கோயில்லே ஆன்மிக சொற்பொழிவு நடந்துகிட்டிருக்கு...!

ஒரு பெரியவர் பேசிக்கிட்டிருக்கார். கடவுளைப் பத்தியும் சுவர்க்கத்தைப் பத்தியும் மனிதனைப் பத்தியும் அவர் விவரமா பேசறார்... எல்லாரும் உட்கார்ந்து கேட்கிறாங்க. அந்தக் கூட்டத்திலே ஒரு தத்துவ ஞானியும் உட்கார்ந்திருந்தார். அவர் அவருடைய நண்பர். பேசி முடிச்சதும் அந்தப் பெரியவர் மேடையை விட்டு இறங்கினார். நேரா அந்த தத்துவ ஞானிகிட்டே வந்தார்.

"எப்படி இருந்தது என் பேச்சு?" –ன்னு கேட்டார். நீங்க பேசினது ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தது –ன்னார் இவர்.

"நான் என்ன அப்படி தப்பா பேசிட்டேன்?" –ன்னார் அவர்.

"கடவுளை நம்புகிறவன் சுவர்க்கத்துக்குப் போவான்!" –னு சொன்னீங்க. அப்புறம் நல்லவிதமா வாழறவன் சுவர்க்கத்துக்குப் போவான்–னு சொன்னீங்க!" –ன்னார்.

"இதுலே என்ன முரண்பாடு?" –ன்னார் அவர்,

"இங்கே ஒருத்தன் எல்லா தப்பும் பண்ணிகிட்டு... கடவுளை நம்பினான்னா அவன் சுவர்க்கத்துக்குப் போவானே? அல்லது ஒருத்தன் ஒரு தவறும் பண்ணாமே ஒழுங்கா வாழ்ந்துகிட்டு... கடவுளை நம்பாமே இருக்கான்.. அவன் என்ன நரகத்துக்குப் போயிடுவானா? கடவுள் நம்பிக்கையுள்ள ஒரு திருடன் என்ன ஆவான்? எங்கே போவான்?

கடவுள் நம்பிக்கையை இல்லாத ஒரு நல்லவன் என்ன ஆவான்? எங்கே போவான்? ஒருத்தன் இங்கே கடவுள் நம்பிக்கையோட வாழறது முக்கியமா? நல்லவனா வாழறது முக்கியமா?"

இதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் குழம்பிப் போயிட்டார். அவரு சொன்னதும் நியாயம் தானே!

கடவுளை நம்புகிறவன் தான் சுவர்க்கத்துக்குப் போவான்னா பேசாமே கடவுளை நம்பிக்கிட்டு... இந்த உலகத்திலே எல்லா தப்பும் பண்ணிக்கிட்டு இருந்துடலாமே!

பேச்சாளர் குழப்பத்தோடே வீட்டுக்குப் போனார். படுத்துத்

தூங்கினார். ஒரு கனவு வந்தது. கனவுலே அவரு ஒரு ரயில்லே வேகமாக போயிக்கிட்டிருக்கார். எதிர்லே உக்கார்ந்திருக்கிறவரைப் பார்த்து "நாம இப்ப எங்கே போறோம்?" –ன்னார்.

"சுவர்க்கத்துக்குப் போய்கிட்டிருக்கோம்!" –ன்னார் அவர். ரயில் போய் நின்னுது.

இவரு இறங்கினார். இங்கே கவுதம புத்தர் இருப்பார்... சாக்ரட்டீஸ் இருப்பார். அவங்களைப் பார்க்கறதுக்கு ஒரு நல்ல வாய்ப்புன்னு நினைச்சிக்கிட்டே அங்கேயும் இங்கேயும் பார்த்தார். அங்கே யாருமே இல்லை... ஒரே பாலைவனம் மாதிரி இருந்துது.

பச்சை இல்லை – பசுமை இல்லை... பூக்கள் இல்லை.... மரமெல்லாம் மொட்டையா நின்னுக்கிட்டிருந்துது. எலும்பும் தோலுமாசிலமுனிவர்கள் அங்கேயும் இங்கேயும் உட்கார்ந்திருக்காங்க.

இவரு அவங்ககிட்டேபோய் புத்தர், சாக்ரட்டீஸ் அவங்கள்லாம் எங்கே இருக்காங்க–ன்னு கேட்டார்.

"அப்படி யாரும் இங்கே இல்லையே... அவங்கள்லாம் யார்? –ன்னு திருப்பிக்கேட்டாங்க.

இவருக்கு அதிர்ச்சி... அப்படின்னா அவங்க எங்கே போயிருப்பாங்க?

உடனே ரயில் நிலையத்துக்கு ஓடிவந்தார். நரகத்துக்கு ஒரு ரயில் புறப்பட்டுக்கிட்டிருந்தது. அதிலே ஏறி உட்கார்ந்தார். ரயில்வேகமா போச்சு. நரகம் நெருங்க நெருங்க... காற்று குளிர்ச்சியா வீசிச்சு! வெளியே பசுமைகண்ணுலே பட்டுது. அங்கே அழகான நீர் நிலைகள்... நந்தவனங்கள்... மலர்கள் கூட்டம்.. அங்கே இருந்தவங்களும் மகிழ்ச்சியா உல்லாசமா இருந்தாங்க. எங்கே பார்த்தாலும் ஆடல் – பாடல் – உற்சாகம்! இவரு ரயிலைவிட்டு இறங்கினார். அவருக்கு சந்தேகம்.

"இதுவா நரகம் ?" –ன்னு விசாரிச்சார்.

"ஆமாம்!" –ன்னாங்க.

"எனக்கு ஒரு சந்தேகம் ?" – ன்னார்.

"என்ன ? –ன்னு கேட்டாங்க.

கவுதம புத்தரும் சாக்ரட்டீசும். லாவோசுவும், சுவாங்சுவும் இவர்களை மாதிரி இன்னும் பல பேரும் கடவுள் நம்பிக்கை இல்லாதவங்க...அவங்கள்லாம் இங்கே இருக்கிறாங்களா? –ங்கறது தான் என் சந்தேகம் –ன்னார்!

இப்ப அவங்க, "இங்கே நீங்க பார்க்கறீங்களே... பசுமையும் பச்சைப் பயிர்களும், ஆடல் பாடல்களும், அழகிய மலர்களும்... இது எல்லாமே கவுதமபுத்தரும் சாக்ரட்டீசும் லாவோசும் மற்ற மகான்களும் இங்கே வர ஆரம்பிச்ச பிறகு தான் உண்டாக ஆரம்பிச்சுது. இந்தப்

பிரதேசத்தையே அவங்க மாத்திப்புட்டாங்க.. இப்போவெல்லாம் இங்கே இருக்கிறவங்க யாரும் சுவர்க்கத்துக்குப் போகவே விரும்பறதில்லை!" அப்படின்னாங்களாம்!"

இந்த அதிர்ச்சியிலே அந்தப் பெரியவர் கனவு கலைஞ்சு முழிச்சிக்கிட்டாராம்.

இதுலே இருக்கிற கருத்து என்னன்னா.... நல்லவர்கள் எங்கே இருக்காங்களோ அந்த இடத்துக்குப் பேர்தான் சுவர்க்கம்.

சுவர்க்கம் – நரகம்–ங்கறதெல்லாம் ஆன்மிகப் பண்புகள்... அவ்வளவுதான்.

ஒரு ஊர்லே இரண்டு இணைபிரியாத நண்பர்கள். ஒருத்தன் கேட்டான். "இப்ப கடவுள் நம்ம முன்னாடி வந்து உங்க ரெண்டு பேர்லே யாராவது ஒருத்தர் மட்டும் என்னோட சுவர்க்கத்துக்கு வரலாம்!" ன்னு கூப்பிட்டா நீ என்ன சொல்லுவே? " –ன்னான்.

"உன்னையே அழைச்சிக்கிட்டுப் போகச் சொல்லுவேன்!"னான் இவன்.

"அப்படின்னா உனக்கு சுவர்க்கம் வேண்டாமா? ன்னான் அவன்.

"நீ என்னை விட்டுப் பிரிஞ்சி போயிட்டியின்னா அப்புறம் இந்த பூலோகமே எனக்கு சுவர்க்கம் தானே!" அப்படின்னான் இவன் !❑

---




### 2025 – கருப்பொருள்
### "பனிப்பாறை பாதுகாப்பு"

உலக நீர் நாள் (World Day for Water அல்லது World Water Day), ஐக்கிய நாடுகள் அவையின் தீர்மானத்துக்கு இணங்க ஆண்டு தோறும் மார்ச் 22 ஆம் நாள் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

1992 ஆம் ஆண்டில் பிரேசிலில் ரியோ டி ஜனெய்ரோ நகரில் இடம்பெற்ற சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்து நடைபெற்ற ஐநா பேரவைக் கூட்டத் தொடரில் வைக்கப்பட்ட 21ம் நூற்றாண்டின் செயல் திட்டத்தின்படி 1993, ஜனவரி 18 ஆம் நாள் 47வது ஐ.நா பேரவை கூட்டத் தொடர் 193ம் தீர்மானத்தை நிறைவேற்றியது. அத்துடன் 1993ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 22ம் நாளும் உலக நீர் வள நாளாக கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது. நீர் வளத்தின் ஒட்டுமொத்தத் திட்டத்தையும் நிர்வாகத்தையும் மேம்படுத்தி நீர் வள பாதுகாப்பை வலுப்படுத்தி நாள்தோறும் கடுமையாகியுள்ள நீர் பற்றாக்குறை பிரச்சினையை தீர்ப்பது என்பது தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் நோக்கமாகும்.

# காந்திகிராம கிராமிய பல்கலைகழக பி.காம்., (கூட்டுறவு) மாணவர்களுக்கான நேர்முக பயிற்சி (Institutional Visit)

காந்திகிராம கிராமிய பல்கலைகழகத்தில் கூட்டுறவுத்துறையின் பி.காம்., (கூட்டுறவு) மாணவர்களுக்கு "சங்கங்களின் நோக்கம், செயல்படும் முறை" தொடர்பான நேர்முக பயிற்சி 11.03.2025 அன்று தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்டரங்கில் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள் மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பினை நடத்தினர்.










கூட்டுறவு இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்புவோர் அஞ்சல் / மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். வெளியிடப்படாத எழுத்தோவியங்களை திரும்ப அனுப்ப இயலாது. கூட்டுறவு இதழில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் மற்றும் துணுக்குகளில் தெரிவிக்கப்படும் கருத்துகள் எழுதுபவரின் கருத்தாகும்.

– ஆசிரியர்

Printed at Central Cooperative Printing Works Limited, 83/95 Anna Salai, Chennai - 600 002 and Published by Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai - 600 010. Editor: Dr.K.C.Ravichandran, Additional Registrar / Managing Director, Tamilnadu Coop. Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai-600 010.




| | | |
|---|---|---|
| திருச்செங்கோடு | பருத்தி, எள், நிலக்கடலை | செவ்வாய் |
| | தேங்காய் பருப்பு | வெள்ளி |
| | மஞ்சள் | சனி |
| கொங்கணாபுரம் | பருத்தி, எள் | சனி |
| | நிலக்கடலை | ஞாயிறு, திங்கள், புதன் |
| மல்லசமுத்திரம் | பருத்தி | புதன் |
| | நிலக்கடலை, மக்காச்சோளம் | திங்கள், வெள்ளி |
| | தேங்காய் பருப்பு | வெள்ளி |
| ஜலகண்டாபுரம் | தேங்காய் பருப்பு | செவ்வாய் |

Date of Publication: First Week of Every Month
Registered Newspaper in India No.1103/57

